**சுகாதார மற்றும் மருத்துவ சேவை முன்னேற்ற செயற்திட்டம் - 2021**

---

சுகாதார மற்றும் மருத்துவ சேவை முன்னேற்ற செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் 2017 நவம்பர் 30 இல் இடம்பெற்ற கலந்துரையாடல் குறிப்புக்களின் II ஆம் பின்னிணைப்பின் 12 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. மூன்றாம் நிலை வைத்தியசாலைகளில் உள்ள மருத்துவ வசதிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் தொற்றாத நோய்கள், குறிப்பாக இருதய நோய்களைக் (cardiovascular diseases) கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்கான மருத்துவ சேவையை மேம்படுத்தி அதன் மூலம் செயற்திட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் சுகாதாரத்தை முன்னேற்றுவதற்கு பங்களிப்பதே இச் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கை மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16,559 மில்லியனுக்கு சமமான ஜப்பான் யென் 11,352 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,519 மில்லியனுக்கு சமமான ஜப்பான் யென் 10,639 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,040 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஒக்தோபர் 20 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 ஒக்தோபர் 20 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஜப்பான் ஒத்துழைப்பு முகவராண்மையின் கடன் மீதி, அத்திகதியின் LKR பெறுமதியில் நாணயமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை, இதன் விளைவாக, நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள கடன் மீதி மற்றும் அபிவிருத்தி செலவின மீதி என்பன குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | - | JICA குறுகிய பட்டியலிடப்பட்ட ஆலோசனை நிறுவனங்களின் வழிகாட்டலின் கீழ், நாங்கள் JICA வழிகாட்டல் மற்றும் ஆவண நடைமுறையுடன் கேள்விகள் மற்றும் திறந்த மதிப்பீட்டை நாங்கள் கோரி ஒரு ஜப்பானிய ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவுசெய்தோம்.<br><br>எனவே இரு தரப்பினரும் 2020 ஆம் ஆண்டில் ஆலோசனை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையின் விளைவாக, 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆலோசனை பணியைத் தொடங்கியது.<br><br>கடன் உடன்படிக்கை 2018 இல் கைச்சாத்திடப்பட்ட போதிலும் ஆலோசனை உடன்படிக்கை 2020 இல் கைச்சாத்திடப்பட்டது. கணக்காய்வு ஐயவினாவில் உள்ளதை போல் 2018 ஆம் ஆண்டில் ஒரு யென் = ரூபாய் 1.4699 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், ஒரு யென் = ரூபாய் 1.722 ஆக இருந்தது. ரூபாவின் மதிப்பு நாளுக்கு நாள் சரிந்து கொண்டே வந்தது. இட மட்டுப்பாடுகள் காரணமாக நிதிக்கூற்றில் நாணயமாற்று விகிதம் எதிர் விளைவுகளின் போக்கை வெளிப்படுத்த முடியாதிருந்ததுடன் யென் கொடுப்பனவில் (90%), நாணயமாற்று விகிதம் கடன் முகாமைத்துவத்திற்கு அதிகம் பயன்படாது. கடன் முகாமைத்துவம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகிறது. கணக்குகளைத் தயாரிப்பதற்கும், வாக்குப்பண பேரேட்டு முகாமைத்துவத்திற்காகவும் மாத்திரமே ரூபாவை மாற்றம் செய்கிறோம். | நாணயமாற்று சமநிலை சீராக்கங்கள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கலந்துரையாடல் குறிப்பின் பின்னிணைப்பு ii இன் 12 ஆம் பந்தி | 2017 நவம்பர் 30 இல் சுகாதார அமைச்சின் செயலாளருக்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையிலான கலந்துரையாடல் தொடர்பாக, செயற்திட்டத்தின் நிதிக் கணக்காய்வு சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. எனினும் அவ்வாறான உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | உள்ளக கணக்காய்வு சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தயவுசெய்து தொடரவும்.<br>• 2022 செப்தெம்பர் 26 ஆம் திகதிய பணிப்பாளர், உள்ளக கணக்காய்வின் கடிதம்<br>• 2022 ஒக்தோபர் 12 ஆம் திகதிய பணிப்பாளர், உள்ளக கணக்காய்வின் கடிதம் மற்றும் கூட்டக் குறிப்புக்கள்<br>• 2023 சனவரி 30 ஆம் திகதிய செயற்திட்ட பணிப்பாளரின் கடிதம் | பிரமாணங்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாண இல. 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் நியமனம் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 5 மில்லியன் பொருளிருப்பு உருப்படிகளை மெய்மையாய்வு செய்வதற்கு சபை நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | உங்கள் குறிப்புக்காக பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.<br>• 2021 சனவரி 12, 2022 பெப்ரவரி 22 மற்றும் 2022 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய செயற்திட்ட பணிப்பாளரின் கடிதங்கள்<br>• 2020 யூலை 07 ஆம் திகதிய சுகாதார அமைச்சின் கணக்காளர் (வழங்கல்கள்) வழங்கிய அறிவுறுத்தல் கடிதம்<br>• சுகாதார அமைச்சின் பிரதம நிதி உத்தியோகத்தர் II ஆல் வழங்கப்பட்ட 2022 ஏப்ரல் 08 ஆம் திகதிய அறிவுறுத்தல் கடிதம்.<br><br>எதிர்பாரதவாறு, மெய்மையாய்வுக் குழு வருடாந்த பொருள் மெய்மையாய்விற்கு வந்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

**3.	பௌதீக செயலாற்றல்**

**3.1	செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

**(அ)**

| **கூறு** | **செயற்பாடு** | **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **கணக்காய்வு விடயம்** | **தாமதத்திற்கான காரணம்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க் கப்பட்ட பௌதீக செயலாற் றல் சதவீதம்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம்** | | |
| இல்லை | பதுளை மாகாண பொது வைத்தியசாலை யின் 10 மாடிக் கட்டிடத்தின் நிர்மாணம் | 100 | இல்லை | சுகாதார அமைச்சின் ஏற்பாடுகளின் அடிப்படையில், பதுளை மாகாண பொது வைத்தியசாலையின் 10 மாடிக் கட்டிடத்தின் நிர்மாணம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதுடன், 2021 ஏப்ரலில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும் 2023 மார்ச் மாதமளவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 1,271 மில்லியன் உபகரணங்களை வழங்கி நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் மேற்படி நிர்மாணத்தின் தோல்வியால் அது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில் லை. | நிதியேற்பாடு இல்லாமை. |

**முகாமைத்துவத்தின் பதில்**

பதுளை மாகாண பொது வைத்தியசாலையில் பத்து மாடி கட்டிடம் GOSL நிதிகள் மூலம் சுகாதார அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த நிர்மாண தாமதத்திற்கு சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவை மேம்பாட்டு செயற்திட்டம் பொறுப்பல்ல. எனினும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு பதுளை நிர்மாணத்தின் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு, மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

விரும்பிய முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)

| கூறு | செயற்பாடு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க் கப்பட்ட பௌதீக செயலாற் றல் சதவீதம் | அடைந்து கொள்ளப் பட்ட செயலாற் றல் சதவீதம் | | |
| இல்லை | அரசாங்க ஒதுக்கீடு | 19.2 | 9.8 | இந்த செயற்திட்டத்திற்கு அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 790 மில்லியனாக இருந்த போதிலும் 2019 முதல் 2021 வரை ரூபா 78.4 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. | அரசாங்க பாதீட்டு ஒதுக்கீடு இல்லாமை. |

**முகாமைத்துவத்தின் பதில்**

அரசாங்க பாதீட்டு ஆவணங்களில் உள்ள ஒதுக்கீடுகளால் அல்லாது செயற்திட்டம் பெறும் பணத் தொகையின் பிரகாரம் வேலை செய்யப்படுகிறது. அதன் பிரகாரம் பெறப்பட்ட பகுதியின் பயன்பாடு கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

- 2019 = 95.9 %
- 2020 = 97.1 %
- 2021 = 97.8 %
- 2022 = 98.1 %

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

விரும்பிய முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருகோணமலை மாவட்ட வைத்தியசாலை, கண்டி, குருநாகல், அனுராதபுரம் போதனா வைத்தியசாலைகளின் நிர்மாணம் மற்றும் கொழும்பு, களுத்துறை, பேராதனை MLT பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் உயிரியல் மருத்துவப் பிரிவிற்கான உபகரணங்களை வழங்கி நிறுவுதல் 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமுல்ப்படுத்தப்படவுள்ள போதிலும் கணக்காய்வு | கடன் அங்கீகாரத்திற்கு முன்னர் செயற்திட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. JICA கடனுக்கு 2018 ஒக்தோபர் 19 இல் அங்கீகாரம் அளித்தது. செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு 2019 சனவரி 01 இல் நிறுவப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஐந்து மாத தாமதம் மற்றும் உலகளாவிய கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக செயற்திட்ட அமுலாக்கல் கால அட்டவணை மாற்றப்பட்டது.<br>• பொதிகள் 1, 2 மற்றும் 3 தொடர்பான அனைத்து ஆவணங்களும் (விரிவான திட்டங்கள் மற்றும் கேள்வி ஆவணங்கள்) 2022 யூன் 17 இல் இணக்கப்பாட்டிற்காக JICA இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>• ஒப்பந்த உடன்படிக்கை 2022 யூன் 16 இல் | விரும்பிய முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை குறைந்தபட்ச கேள்விகள் கோரப்படவில்லை. | சுகாதார அமைச்சு மற்றும் ஜப்பானின் ரோக்கியோவின் SIRIUS கூட்டுத்தாபனம் என்பவற்றிற்கு இடையே கைச்சாத்திடப்பட்டு, இணக்கப்பாட்டிற்காக JICA இற்கு அனுப்பப்பட்டது.<br><br>ஆனால் JICA இதுவரை மேற்படி கோரிக்கைகளுக்கு (ஜப்பானின் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில்) இணக்கப்பாட்டை வழங்கியிருக்கவில்லை. எனவே பெறுகை செயன்முறையை தொடர முடியவில்லை. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியளவில், செயற்திட்டத்தால் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம் தொடர்பான செயன்முறையில் தொடர்புடைய பூர்வாங்க வேலைகள் செய்யப்பட்டுள்ளன. செயற்திட்ட ஆலோசனைக்காக யென் 872 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கேள்விகளை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் உயிர்-மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவுக்கான உபகரணங்களை வழங்கி நிறுவுவதற்கு கேள்வி உடன்படிக்கை (பெறுகை பொதி இல. 06) கைச்சாத்திடப்பட்டது.<br><br>நிர்மாணப் பொதிகளின் அனைத்து விரிவான திட்டங்களும் கேள்வி ஆவணங்களும் தயாரிக்கப்பட்டு 2022 யூன் 17 இல் JICA இற்கு இணக்கப்பாட்டிற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்கத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எதிர்பாராதவாறு, கேள்வியை பிரசுரிப்பதற்கு இன்னும் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. கணக்காயவு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆலோசனை சேவையின் நிதி முன்னேற்றம் சரியானதாகும். கடன் வழங்கல் இடைநிறுத்தப்பட்டதால், பௌதீக முன்னேற்றம் 30% ஆக உள்ளது. | விரும்பிய முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், ஜப்பானிய கடன் வழங்கும் முகவர் வழங்க ஒப்புக்கொண்ட 10,639 மில்லியன் யென் கடன் உதவித் தொகையில் 243 மில்லியன் யென் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. பயன்படுத்தப்பட்ட தொகையானது கொடுக்கப்பட வேண்டிய மொத்தத் தொகையில் 2.78 சதவீதம் என்ற மிகக் குறைந்த அளவாகும். | 2020, 2021, மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஆலோசனைச் சேவைகள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டன. கடனின் மொத்தப் பணம் ஆலோசகர்களின் கொடுப்பனவுகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. எனவே கடன் செலவினமானது கடன் தொகையில் 2.78% மாத்திரமேயாகும் (யென் 10639 மில்லியன்). ஆனால் பௌதீக முன்னேற்றம் திருப்திகரமான அளவில் இருந்தது. திட்டமிட்டவாறு நிர்மாணம் மற்றும் உபகரணங்களை நிறுவுதல் ஆகியவற்றின் தொடக்கத்துடன் முன்னேற்றம் கணிசமாக அதிகரிக்கும். இறுதிப் பயனர்கள் மற்றும் நிர்வாக அமைப்புக்களுடன் விரிவான திட்டங்களைத் தயாரிப்பதன் காரணமாக ஜப்பான் அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் செயற்திட்டங்களின் ஒரு பொதுவான அம்சம் நீண்ட திட்டமிடல் காலப்பகுதி ஆகும். | விரும்பிய முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒவ்வொன்றும் ரூபா 173,000 படி 04 கணனிகளை கொள்வனவு செய்வதற்கு பரிந்துரைத்துள்ளதுடன் பெறுகைக் குழு இதனை அங்கீகரித்திருந்தது. 2020 திசெம்பர் 22 ஆம் திகதிய செயற்திட்ட பணிப்பாளரின் ஜேஐசீஏ/எச்ஏஎம்எஸ்ஐபி/12/2019 ஆம் இலக்க கடிதம் இந்த கணனிகளை ஒரு வாரத்திற்குள் வழங்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவித்திருந்த போதிலும், கணனிகள் 2021 மே 18 இல் பெறப்பட்டன. தாமதம் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பரிந்துரைக்கப்பட்ட விவரக்குறிப்புகளின் பிரகாரம் கணனிகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்திருக்கவில்லை. 2021 யூலை 22 ஆம் திகதிய செயற்திட்ட பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் வழங்குநருக்கு 04 DVD டிரைவ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் 2021 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய உறுதிச்சீட்டு இலக்கம் 100 மூலம் ரூபா 692,000 வழங்குநருக்குச் செலுத்தப்பட்டது. | இந்த கணனி பெறுகைக் காலப்பகுதியின் போது கொவிட் 19 தொற்றுநோய் நாடு முழுவதும் பரவலாக பரவியது. பெரும்பாலான அரசாங்க துறை மற்றும் தனியார் நிறுவனங்களின் அலுவலகங்கள் அத்தியாவசிய பணிகளுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டன. பொது நிர்வாக அமைச்சு வீட்டிலிருந்து வேலை செய்வதற்கு அல்லது வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் கலந்து கொள்வதற்கு அறிவுறுத்தியுள்ளது. தபால் சேவை வழக்கம் போல் இயங்கவில்லை. சில நிறுவனங்கள் தங்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பார்வையாளர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. சர்வதேச பொருள் போக்குவரத்து மோசமாக பாதிக்கப்பட்டதுடன் சில நாடுகளால் அனுமதிக்கப்படவில்லை. புதிய கொவிட் பரவல்கள் நுழைவதைத் தடுப்பதற்கு இலங்கை பல விதிகளை விதித்துள்ளது. இந்த பொருட்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படாததுடன் இது இறக்குமதி செய்யப்பட வேண்டியிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு வழங்குநர் அதிகாரிகளுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டதுடன், இது முன்னுரிமை தேவை என்பதால் இந்தப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு தங்களால் இயன்றவரை முயற்சித்தது. எதிர்பாராதவாறு உலகில் சாதகமற்ற நோய் நிலைமை காரணமாக வெற்றியளிக்கவில்லை. பல வாய்மொழிமூல கலந்துரையாடல்களுக்கு மேலதிகமாக, தாமதமின்றி கட்டளையை வழங்குமாறு 2021 சனவரி 08 மற்றும் 2021 பெப்ரவரி 11 இல் PMU தொடர்புடைய வழங்குநரிற்குத் தெரிவித்தது. வழங்குநர் அவர்களின் குறைகளை பலமுறை தெரிவித்துவிட்டு நிலைமையை விளக்கினார். | இது குறித்து விசாரணை நடாத்தப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வற்றிற்கு பதிவு செய்யப்படாத நிலையில் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்கும் நிறுவனத்திற்கு 2020 ஆம் ஆண்டு தொடர்பான ஆலோசனை சேவைகளுக்கு பணம் செலுத்தும் போது வற்றாக ரூபா 13 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. கொடுப்பனவிற்காக | 2020 ஆம் ஆண்டுக்கான ஆலோசனை நிறுவனம் வற் பதிவு ஆவணங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் ஒப்படைத்து தற்காலிக தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) பெற்றுள்ளது. கொவிட் காரணமாக, அவர்களால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை அணுக முடியவில்லை. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை தொடர்பு கொள்வதற்கு முயற்சித்தோம். நாங்கள் பல முறை | பணம் செலுத்துவதற்கு முன்னர் அனைத்து ஆவணங்களும் சரிபார்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களில் வற் இலக்கங்கள் நிலுவையில் இருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. | முயற்சித்தோம், ஆனால் அது தோல்வியடைந்தது. ஆலோசனை நிறுவனம் வற் கோரும் கடிதத்தை சமர்ப்பித்து ஆலோசகரின் பெயருக்கு (KRC) ஆதரவாக வற் காசோலைகளைப் பெற விரும்புகிறது. GOSL நிதிகளைப் பாதுகாப்பதற்கு, நாங்கள் கோரியவாறு வற் காசோலையை வழங்கியிருக்கவில்லை. ஆனால் கணக்கீட்டு நோக்கத்திற்காகவும், செயற்திட்ட முன்னேற்றத்தை வெற்றிகரமாக பேணுவதற்கும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு ஆதரவாக நாங்கள் அதை எழுதி எங்கள் காசுப் புத்தகத்தில் வைத்திருந்தோம். சரியான வற் இலக்கத்தை பற்றி நாங்கள் அதிகளவில் கருத்தில் கொண்டோம், மேலும் ஆலோசனைக்கான வற் காசோலையை ஒருபோதும் செலுத்தவில்லை. ரூபா 13,037,608.48 தொகை தேறாத காசோலைகளாகவே உள்ளது. | |
| (இ) | சேவை உடன்படிக்கை ஏற்பாடு ஆலோசனை சேவைகளை நிறுத்துவது பற்றி குறிப்பிடாததால், இது தொடர்பாக தேவையான சட்ட ஆலோசனைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை அல்லது செயலாற்றல் பிணைமுறி தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் தொடர்ச்சி மற்றும் கடன் வழங்கல் தொடர்பான நிச்சயமற்ற தன்மை காரணமாக, 2022 நவம்பர் 04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஆலோசனை ஒப்பந்தத்தின் செயற்பாடு மற்றும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் குறித்து நிதி அமைச்சிற்கான பிரதிகளுடன் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு சுகாதார அமைச்சிற்கு தெரிவித்துள்ளது. மேலும், 2022 நவம்பர் 27 இல் நடாத்தப்பட்ட செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டத்தில் இது கலந்துரையாடப்பட்டிருந்தது.<br><br>பரஸ்பர உடன்படிக்கையின் மீதான ஆலோசனை ஒப்பந்தம் முடிவுறுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள், ஆலோசனை ஒப்பந்தத்தின் செயலாற்றல் பிணைமுறியின் பெறுமதி மற்றும் ஆலோசனை ஒப்பந்தம் தொடர்பான கடன் கடிதம் (கால எல்லை) என்பன சுகாதார செயலாளர் தலைமையில் ஒரு மன்றத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் சுகாதார அமைச்சின் சட்டக் கிளையின் தலைவர் பங்குபற்றியிருந்தார். இது செயற்திட்டத்தின் முடிவுறுத்தல் அல்ல என்பதால், மேற்படி விடயத்தைக் கையாளும் பொறுப்பை சுகாதார அமைச்சு ஏற்றுக்கொண்டிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு அறிவுறுத்தல்களுக்காக சுகாதார அமைச்சின் சட்டக் கிளைக்கு கோரிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளது. | உடன்படிக்கையில் அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

**3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி காலாண்டிற்காக கண்டி, அநுராதபுரம் மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளுக்காக தயாரிக்கப்பட்ட செயற்திட்ட நிலை அறிக்கையின் (PSR 2021) பிரகாரம் ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 134,000 நோயாளிகளின் இறப்புக்கள் ஏற்படுகின்றதுடன் அவர்களில் 40 சதவீதமானது இருதய நோய்களால் ஏற்படுகின்றன. அதன் பிரகாரம் குறித்த செயற்திட்டமானது குறித்த நேரத்தில் அமுல்ப்படுத்தப்படாமையால், நோயாளர்களின் மரணங்கள் மேலும் அதிகரிக்கும் என்பதும், மேலும் அது தொடர்பான சுகாதார பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடலாம் என்பதும் அவதானிக்கப்பட்டது. | இந்த கூற்று முற்றிலும் சரியானதாகும். இந்தத் தரவுகள் காலாண்டு ரீதியாக வெளியிடப்பட்ட செயற்திட்ட நிலை அறிக்கையின் (PSR) உள்ளடக்கத்திலிருந்து எடுக்கப்பட்டு, செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் விநியோகிக்கப்பட்டது. செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் ஏற்படும் தாமதம், நாட்டில் இருதய நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தீங்கு விளைவிக்கும். இறப்பு விகிதம் அதிகரிக்கும். பதுளை போன்ற தொலைதூர இடங்களிலிருந்து நோயாளிகளை பிரதான வைத்தியசாலைகளுக்கு (வசதிகள் உள்ள) கொண்டு செல்வதற்கான அரசாங்கச் செலவினங்கள் அதிகரிக்கும். 2023 ஏப்ரல் 30 இல் செயற்திட்டத்தை இடைநிறுத்தி, செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவை முடிவுறுத்தினால், அவசர இருதய சிகிச்சைக்கு தகுதியான அப்பாவி உயிர்களைக் காப்பாற்றும் வாய்ப்பை இழக்க நேரிடும். | அந்த செயற்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |